**செய்தி வெளியீடு எண்:168** **நாள்: 18.03.2017**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கோவையில் அரசு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு தனது சொந்த தொகுதியான இடைப்பாடி தொகுதிக்கு வருகை புரிவதற்காக கோவையிலிருந்து வருகின்ற வழியில் குமாரப்பாளையம், பள்ளக்கபாளையம், சங்ககிரி, கொங்கனாபுரம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பொதுமக்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது வழிநெடுகிலும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் சாலையின் இருமருங்கிலும் திரளாக நின்று வரவேற்றார்கள். அந்த வரவேற்பினை ஏற்றுக்கொள்ளும் வகையில் சுமார் மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்தே சென்று பொதுமக்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டதோடு அவர்கள் அளித்த பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கொங்குனாபுரம் வரவேற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பேசும் போது, இடைப்பாடி தொகுதிக்குட்பட்ட இடைப்பாடி ஊராட்சி ஒன்றியம், இடைப்பாடி நகராட்சி, கொங்கனாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொங்கனாபுரம் பேரூராட்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி புதிதாக ஒரு பாலிடெக்னிக் கல்லூரி துவக்கப்படும். கொங்குனாபுரம் பகுதியிலுள்ள எட்டிகுட்டமேட்டில் தொழிற்பேட்டை விரைவில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்ததோடு, பொதுமக்களின் அனைத்து அத்தியாவசிய அடிப்படை தேவைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு நிறைவேற்றி தரப்படும் என தெரிவித்தார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**